INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

**EXECUTIVE DIRECTOR:**
*YASMIN SOOKA*

**ஊடக அறிக்கை: மனித உரிமை அமைப்புக்களின் போர்க்குற்ற வழக்கினைத் தொடர்ந்து பிரேசிலிலுள்ள சிறிலங்காத் தூதுவர் தப்பியோட்டம்.**

*29 ஒகஸ்ற் 2017*

பிரேசிலியா/இலண்டன்: 2009 இல் சிறிலங்காவில் நடந்த இறுதி யுத்தத்தில் பங்குவகித்திருந்த இலத்தீன் அமெரிக்காவுக்கான சிறிலங்காத் தூதுவர் ஜெகத் ஜெயசூரியாவுக்கு எதிராக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு பிரேசிலிலும் கொலம்பியாவிலும் போர்க்குற்றச்சாட்டு வழக்குகளைப் பதிவுசெய்துள்ளது. சிறிலங்காவில் நடந்த யுத்தத்தின் கடைசி மாதங்களில் 40 ஆயிரத்திற்கும் 70 ஆயிரத்திற்கும் இடைப்பட்ட தமிழ் மக்கள்[1] கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை, 2015 இல் மேற்கொண்ட விசாரணையின்போது[2] சிறிலங்காப் படைகள் திட்டமிட்ட போர்க்குற்றங்களிலும், பரவலான சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்களிலும் ஈடுபட்டதற்கான நம்பகரமான ஆதாரங்களையும் கண்டறிந்துள்ளது.

வைத்தியசாலைகள் மீது மீண்டும் மீண்டும் நடாத்தப்பட்ட தாக்குதல்கள், சித்திரவதை நடவடிக்கைகள், பாலியல் ரீதியான வன்முறைகள், காணாமற்போகடித்தல்கள், நீதிக்குப் புறம்பான குற்றங்கள் ஆகியவற்றில் ஈடுபட்ட இராணுவ அணிகளின் தளபதி என்ற ரீதியில், ஜெனரல் ஜெகத்சூரியவுக்குத் தனிப்பட்ட குற்றப் பொறுப்புக்கள் இருப்பதாக பிறேசிலியாவிலும் போகோற்றாவிலும் அவருக்கு எதிராகப் போடப்பட்டுள்ள வழக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“ஐ.நா. அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட இப்படிப்பட்ட ஒரு நபருக்கு இராஜதந்திரப் பதவிநிலை வழங்கி வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதும், அவருடைய செயற்பாடுகளுக்கு வெகுமதி அளிப்பதும் கோபத்தை உண்டுபண்ணும் செயற்பாடாகும். சர்வதேச நீதிக்கும் உண்மைக்குமான அமைப்பும் அதன் இலத்தீன் அமெரிக்கப் பங்காளிகளும் அவர்*

[1] *40,000 according to UN Panel of Experts report; 70,000 according to the UN Internal Inquiry Report.*
[1] *A /HRC/30/CRP.2, Report of the OHCHR Investigation on Sri Lanka (OISL) 2015.*

வழக்கினை எதிர்கொள்வதையே விரும்பினார்கள், ஆனால், அவர் இப்பிராந்தியத்திலிருந்து திடீரெனத் தப்பி, சிறிலங்காவுக்குத் திரும்பிச்சென்றுவிட்டதாக நாங்கள் அறிகின்றோம்'' இவ்வாறு சர்வதேச நீதிக்கும் உண்மைக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், தென்னாபிரிக்க மனித உரிமைகள் வழக்குரைஞருமான யஸ்மின் சூக்கா தெரிவித்தார். ''தான் குற்றமேதும் இளைக்கவில்லை என்றும், அப்பாவி என்றும் ஜெனரல் ஜெயசூரிய நம்பியிருந்தால், அவர் அப்பதவியிலேயே தொடர்ந்தும் இருந்து, வழக்கினை எதிர்கொண்டிருப்பார். சிறிலங்கா உண்மையில் சட்டத்தை மதித்து, பொறுப்புணர்வுடன் நடக்குமாக இருந்தால், அவர்மீது குற்றஞ்சாட்டுக்களை அவரை எதிர்கொள்ளவிடவேண்டி சரியான நேரம் இதுவே'' என அவர் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்பெய்ன் நாட்டு வழக்குரைஞரான கார்லெஸ் கஸ்ரெசனா பெர்னாண்டஸ் அவர்களே பல்வேறு இலத்தீன் அமெரிக்க அமைப்புக்களுடன் இணைந்து இந்த வழக்கினை முன்னின்று ஒருங்கிணைத்து பதிவுசெய்தார். 1996இல், ஜெனரல் விடெலா மற்றும் ஜெனரல் பினோசெற் ஆகியோருக்கு எதிராக ஸ்பெய்ன் தேசிய நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடக்கிய ஸ்பெய்ன் வழக்குரைஞர்களில் இவரும் ஒருவர். இவர்கள் பின்னர் குவாட்டமாலாவில் சட்டநடவடிக்கைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் தலைவராக இருந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி அல்பொன்சோ போர்ற்றில்லோ உட்பட, போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு எதிராகவும் வழக்குப்பதிவுகளை மேற்கொண்டிருந்தார்.

''ஜெனரல் பினோசெற் அல்லது விடெலா ஆகியோருக்கு எதிராக நாம் ஆரம்பித்த வழக்குகளை விட, இந்த வழக்கில் ஜெயசூரியவுக்கு எதிராக அதிகமான ஆதரங்கள் உள்ளதைப் பார்க்கும்போது எனக்கு அதிர்ச்சியாக உள்ளது'' என கஸ்ரெசனா மேலும் தெரிவித்தார். ''பினோசெற்றிற்கு எதிராக நாம் வழக்குத்தாக்கல் செய்தபோது, அவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றோ அல்லது சர்வாதிகார இராணுவத்திற்கு எதிராக ஆர்ஜெந்தீன நாட்டு நீதிமன்றம் தீர்ப்புக்கூறும் என்றோ எவருமே நம்பவில்லை. குவாட்டமாலா பாதுகாப்புக் படைகளுக்கு எதிராகத்தீர்ப்பு வரும் என்றும் யாரும் நம்பவில்லை, ஆனால், நல்ல, அர்ப்பணிப்புள்ள சிலருடன் சேர்ந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுத்தருவது சாத்திமே. அவர் பிரேசிலைவிட்டுத் தப்பிச்சென்றதைப் பற்றி நான் கவலைப்படப்போவதில்லை: இப்போதுதான் வழக்கு ஆரம்பமாகியுள்ளது. அவர் செய்த செயல் எங்களுடைய வேலையை மேலும் இலகுபடுத்தியுள்ளது. காரணம், தப்பியோடுவதனால் அவரால் தண்டனையிலிருந்து தப்பியோடி முடியாது'' இவ்வாறு கார்லெஸ் கஸ்ரெசனா பெர்னாண்டஸ் மேலும் தெரிவித்தார்.

2007 முதல் 2009 வரை வன்னி பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரியாக ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய செயற்பட்டிருந்தார். மேலும் போரின் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் தன்னுடைய மேற்பார்வையிலேயே நடைபெற்றதாக அவரே ஏற்றுக்கொண்டார். போரின் இறுதிக்கட்டத்தின்போது தமிழ்ப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான எறிகணை மற்றும் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்றதுடன், வைத்தியசாலைகளும் இலக்குவைக்கப்பட்டன. மேலும் சிறிலங்காவின் மிகவும் பிரபல்யமான சித்திரவதை மையமாக அறியப்படும ''ஜோசெப் முகாமில்''[3] இருந்தவாறே அவர் படை நடவடிக்கையை மேற்பார்வை செய்தார். சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பானது ஜெகத் ஜெயசூரிய அம்முகாமின் பொறுப்பாக இருந்த காலத்தில் இடம்பெற்ற சித்திரவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி அங்கிருந்து தப்பிய 14 பேரிடமிருந்து வாக்குமூலங்களைச் சேகரித்துள்ளது. கைவிலங்குகள், சங்கிலிகள், தடுத்து

[3] ITJP report in:
English: http://www.itjpsl.com/assets/ITJP_Joseph_camp_report_FINAL.pdf
Spanish: http://www.itjpsl.com/assets/ITJP_Joseph_camp_spanish.pdf
Portuguese: http://www.itjpsl.com/assets/ITJP_Joseph_camp_report_POR_v2.pdf

வைக்கப்பட்டவர்களைத் தலைகீழாகத் தொங்கவிடுவதற்கான கப்பிகள், கைவிலங்குகள் மாட்டிவிடுவதற்கான கம்பிகள் போன்றவற்றைக் கொண்ட சித்திரவதைக் கூடங்கள் மற்றும் நிலத்துக்குக் கீழே அமைக்கப்பட்டுள்ள தடுத்துவைப்பதற்கான அறைகள் என்பன ஜோசெப் முகாமில் உள்ளன. அங்கே தடுத்துவைக்கப்பட்டு, நாம் நேர்காணல் கண்டவர்கள் தகவல் தெரிவிக்கையில், இரவு நேரங்களில் ஏனையவர்களின் அழுகுரல்களைக் கேட்கக்கூடியதாக இருந்தாக விபரித்தார்கள். இது அம்முகாமிலிருந்த ஜெனரலுக்கும் நிச்சயம் கேட்டிருக்கும்.

தொடர்ந்து இராணுவத்தளபதியாக நியமனம் பெற்ற ஜெனரல் ஜெயசூரிய சண்டை முடிந்தநேரத்தில் சரணடைந்த நூற்றுக்கணக்கானவர்கள் நீதிக்குப் புறம்பான முறையில் படுகொலைசெய்யப்பட்டமை மற்றும் வலிந்து காணாமற்போகடிக்கப்பட்டமை ஆகிய செயற்பாடுகளுக்கும் கட்டளைப் பொறுப்பைக் கொண்டுள்ளார் என்றும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எட்டு ஆண்டுகள் கடந்தும், காணாமற்போகடிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்களது பிள்ளைகளது புகைபடங்களைத் தாங்கியவாறு அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்கும்படி கோரி சிறிலங்காவின் வடக்கு, கிழக்கு வீதியோரங்களில் இருந்தவாறு நாள்தோறும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றன.

“ஓகஸ்ற் 30ஆம் திகதி, காணாமற்போனவர்களின் சர்வதேச தினத்தினை நாம் அனுஸ்டிக்கின்றோம். அத்துடன், காணாமற்போகடிக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு நாடு என்ற அடிப்படையில், சிறிலங்காவிலுள்ள பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் உறுதுணையாக நாம் நிற்கின்றோம்” என கொலம்பிய நீதிபதிகள் ஆணையத்தைச் சேர்ந்த யுவான் கார்லொஸ் ஒஸ்பினா தெரிவித்தார். “நீதி கிடைக்காமல் வாழும் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை நாம் அறிவோம். குற்றமிழைத்தவர்கள் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுவதை முறியடிப்பதற்கு எம்மால் எதனையாவது செய்யமுடியும் என்றால், அதனைச் செய்வது எங்கள் கடமையாகவே நாம் கருதுகின்றோம்” எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

- முற்றும் -

**சுருக்கக் குறிப்புக்கள்:**

**யஸ்மின் சூக்கா:** இவர் ஒரு முன்னணி மனித உரிமைகள சட்டவாளரும், நிலைமாறும் நீதிக்கான நிபுணரும் ஆவார். அத்துடன் முன்னாள் தென்னாபிரிக்க மற்றும் சியாராலியோனின் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், சிறிலங்கா தொடர்பான நிபுணர்குழுவின் பான் கி மூனுக்கான சட்ட ஆலோசகராகவும் செயற்பட்டார். மத்திய ஆபிரிக்கக் குடியரசில் பிரான்ஸ் அமைதிப்படைகள் மேற்கொண்ட பாலியல் வன்முறைகளை விசாரணைசெய்த ஐ.நா. விசாரணைக்குழுவிலும் பணியாற்றியிருந்தார். தற்போது தென்சூடான் மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இரண்டாவது வருடமாகத் தொடர்ச்சியாகத் தலைவராக இருந்துவருகின்றார். மேலும் சிறிலங்காவில் நடந்த போர்குற்றங்களிலிருந்து தப்பிவந்தவர்களிடமிருந்தும் சாட்சிகளிடமிருந்தும் வாக்குமூலங்களைச் சேகரிப்பதற்காக 2013இல் அமைக்கப்பட்ட சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பின் தலைவராக இருப்பதுடன், தென் ஆபிரிக்க மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் செயற்பட்டுவருகின்றார்.

**கார்லொஸ் கஸ்றேசனா பெர்னாண்டேஸ்:** இவர் 2007 தொடக்கம் 2010 வரை குவாட்டமாலாவில் சட்டநடவடிக்கையிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களுக்கு எதிரான அமைப்பின் ஆணையாளராகச் செயற்பட்டார். 1989முதல், ஸ்பெய்னிலுள்ள பொதுவழக்கறிஞர் அமைப்பின் உறுப்பினராக இருப்பதுடன், 2005 முதல், மட்றிட்டிலுள்ள உச்ச நீதிமன்றத்திலும் பணியாற்றிவருகின்றார். முன்னதாக இவர் ஒரு வழக்கறிஞராக, விசாரணை நீதிபதியாக, நீதிமன்ற நீதிபதியாக, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஊழலுக்கு எதிராக விசேட வழக்கறிஞராகச் செயற்பட்டிருந்தார். 1996இல், பினோசெற் வழக்கினை ஆரம்பித்து, ஆஜந்தீன மற்றும் சீலி நாட்டு சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு எதிராக வழக்கினைத் தொடர்ந்தார். ஸ்பெய்னின் தேசிய மனித உரிமைகள் விருது, குஜாடாலாஜாறா (மெக்சிக்கோ) மற்றும் சென்ரல் (சீலி) பல்கலைக்கழகங்களின் கௌரவ கலாநிதி விருதுகள், குவாட்டமாலாவின் குவெட்ஸல் பெருஞ்சிலுவை விருது, இத்தாலியின் ஒற்றுமை நட்சத்திர விருது, பிரான்ஸின் அதியுயர் விருதான Legion of Honor, மற்றும் ஸ்பெய்னின் சிவில் மெரிட் பதக்கம் ஆகியவை இவர் பெற்ற விருதுகளில் சில.

## பங்காளி அமைப்புக்கள்:

**ஆஜென்ரீனா:** Centro de Estudios Legales y Sociales எனப்படும் அமைப்பானது மனித உரிமைகளைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. இராணுவச் சர்வாதிகார ஆட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைக் கொண்ட ஒரு குழுவால் 1979இல் இது ஆரம்பிக்கப்பட்டது. அதுமுதற்கொண்டு இவ்வமைப்பானது சர்வாதிகார ஆட்சியின்போது மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளிலும், தற்போதைய ஜனநாயக முறைமையில் நடைபெறும் திட்டமிட்ட மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குகளிலும் போராடி வந்துள்ளது. குடிமக்கள் பாதுகாப்பு, காவல்துறைக் கொடூரங்கள், சிறைச்சாலை நிலைமைகள், பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார உரிமைகள், நீதிஅமைப்புக்களைப் பலப்படுத்தல், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரல், மற்றும் விசாரணைகள், ஆலோசனைகள், அதன் குறிக்கோள்கள்மீது

சட்டநடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவற்றின் மூலம் ஆயுதப்படைகளை ஜனநாயகப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளில் கவனம்செலுத்தி வருகின்றது.

**பிரேசில்:** CONECTAS எனப்படுவது ஒரு அரசசார்பற்ற, வருமானத்திற்காக பணியாற்றாத ஒரு அமைப்பாகும். இது 2001, செப்ரெம்பரில், பிரேசில், சாவோ போலோவில் ஸ்தாபிக்கப்பட்டது. கூட்டு வலையமைப்புக்கள் மூலமாக மூன்றாம் உலகநாடுகளிலுள்ள மனித உரிமைப் பாதுகாப்பாளர்களையும் கல்விமான்களையும் பலப்படுத்துவதையும், அவர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதுமே இதன் இலக்காகும். மேலும், இம்மூன்றாம் உலகநாடுகளின் வெளிநாட்டுக்கொள்கைகளைக் கண்காணிப்பதன் மூலமாக மனித உரிமைகளின் சர்வதேசப் பாதுகாப்பினைப் பலப்படுத்தவும் அது முனைகின்றது.

**சீலி:** மனித உரிமைகள் சட்ட அமைப்பான Nelson Caucoto and Associates, 1978இல், செல்சன் கௌகோரோ என்ற சட்டவாளரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் பினோசெற் ஆட்சியின்போது Vicariate of Solidarity இலும், பின்னர், 1995 முதல் மிக அண்மைக்காம் வரை Metropolitan Judicial Assistance Corporation இன் மனித உரிமைகள் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டார். மேலும், தடுத்துவைக்கப்பட்டிருந்து காணாமற்போகடிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான அமைப்பின் வழக்கறிஞராகவும் இவர் செயற்பட்டார்.

**கொலம்பியா:** Comisión Colombiana de Juristas எனப்படும் ஆணைக்குழுவானது ஐ.நா சாசனங்ளின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் அமைவாக சர்வதேச மனித உரிமை, மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை வரைவதற்கும், கொலம்பியாவில் சட்டங்களை முழுமையாக அமுல்ப்படுத்தப்படுவதற்கும் உதவுகின்றது. இவ் ஆணைக்குழுவானது ஜெனிவா சர்வதேச நீதிபதிகள் ஆணையத்தினதும் லீமாவிலுள்ள அன்டீயன் நீதிபதிகள் ஆணையத்தினதும் துணை நிறுவனமாகச் செயற்பட்டு ஐநாவில் ஆலோசனைத்துவ அந்தஸ்தை கொண்டுள்ளது.

**பெரு:** Instituto de Defensa Legal ஆனது பெருவிலுள்ள ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். இது நாட்டில் அமைதியை ஏற்படுத்தி, அதன ஜனநாயக அமைப்புக்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றது. 1980களில், பயங்கரவாத முறைமைகளைக் கையாண்ட அரசியல் அமைப்பான Sendero Luminoso இன் தோற்றத்தின்போதும் நாட்டில் பொதுவான மற்றும் நிரந்தரமான வன்முறைகள் தோன்றியபோதும், அரசாங்கம் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களை மீறியபோதும், குறிப்பாக அப்பாவித் தனிநபர்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்டமையாலும், 1983இல் இவ்வமைப்பானது அமைக்கப்பட்டது.

**தென்னாபிரிக்கா/இலண்டன்:** சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பானது (The International Truth and Justice Project ) சிறிலங்காவில் நடந்த போர்க்குற்றங்களிலும், போருக்குப் பின்னர் பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதன் சாட்சிகளிடமிருந்து 2013 முதல் வாக்குமூலங்களைச் சேகரித்து வருகின்றது. இதுவே தற்போது சிறிலங்காவுக்கு வெளியே அதிகளவிலான சாட்சியங்களைச் சேகரித்துவைத்துள்ள அமைப்பான உள்ளது. தற்போது இவ்வமைப்பிடம் கிட்டத்தட்ட தெளிவான விபரங்களைக்கொண்ட 300 சாட்சிய வாக்குமூலங்களும் அவற்றுக்கு ஆதரவான மருத்துவ ஆதாரங்களும், இதர விபரங்களும் உள்ளன. சிறிலங்காவிலிருந்து தப்பிவந்த அதன் பிரைஜைகளிடமிருந்து அது வாக்குமூலங்களைத் தற்போது சேகரித்துவருகின்றது.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT